ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
தலை
வெட்டிக்
கூட்டம்
ரூ.
2

சீகாரம்!

சீகாரம் எனப்படும் அழகிய பறவை மேற்கு தொடர்ச்சி மலைகளில் அதிகமாக காணப்படுகிறது. நீலகிரியிலும், சேர்வராயன் மலையிலும் சீகாரம் நிறையவே காணப்படுகிறது. இது மைனாவைவிடப் பெரியதாகவும், புறாவைவிடச் சிறியதாகும் இருக்கும். இது கருங்குருவி குடும்பத்தைச் சேர்ந்தது.

கறுநீல நிறத்தில் சீகாரம் இருக்கும். ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி இருக்கும். இணை கூடும் காலத்தில் இது மனிதன் சீழ்க்கையடிப்பதைப் போலவே இது கூவும். தண்ணீரில் உள்ள பூச்சிகள், நத்தை, நண்டு முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். சிற்றோடைகளின் நடுவிலுள்ள பாறைக்குப் பாறைத் தாவி இரையை பிடித்துத் தின்னும். நத்தை, நண்டுகளைப் பிடித்து பாறையில் மோதி, ஓட்டை உடைத்து உள்ளிருக்கும் சதையை விழுங்கும். இது வாலை அடிக்கடி சுண்டிக்கொண்டும் விசிறியைப் போல விரித்துக் கொண்டும் இருக்கும்.

இது பிப்ரவரி முதல் ஆகஸ்டு வரையில் முட்டை இட்டு குஞ்சு பொரிக்கும். சிற்றாறுகளின் அருகில்தான் இவை கூடு கட்டும். கூடு பெரியதாகவே இருக்கும். வேர், பாசி, புல், களிமண் எல்லாவற்றையும் சேர்த்து கூட்டைக் கட்டும். மரத்தின் வேர்களுக்கு அருகிலும், பாறைகளின் இடுக்குகளிலும் கூடு கட்டும்.

சீகாரம் பொதுவாக 3லிருந்து 4 முட்டை வரை இடும். முட்டை வெளுப்பான பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் இருக்கும். அதன் மேல் செம்பழுப்பு புள்ளிகளும் இருக்கும்.

சீகாரம் கூடு கட்டுவதிலும் குஞ்சுகளைப் பேணி காப்பதிலும் ஆணும் பெண்ணும் இரண்டுமே கலந்து வேலை செய்யும்.

சீகாரம் பறவையின் ஒலி மிகவும் இனிமையான சீழ்க்கை போல இருப்பதால் இதை விருப்பத்தோடு வளர்க்கின்றனர். குஞ்சாக இருக்கும்போதே இதை வளர்த்தால் எளிதில் பழகிவிடும். இதனைச் சீழ்க்கை சிறுவன் என்றும் அழைப்பதுண்டு.

ராணி காமிக்ஸ்-238
(மாதம் இருமுறை இதழ்)

மே 16-31
1994

முகமூடி வீரர் மாயாவி

தோன்றும்

Tex Sampath Tirupur

தலை வெட்டிக் கூட்டம்

பெங்ககாலியா காட்டுக்குள் நான்கு கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 200-க்கும் மேற்பட்ட காட்டுவாசிகள் வாழுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. இந்த கிராமங்களுக்குள் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அதனை தட்டிக்கேட்க கூடியவர் முகமூடி வீரர் மாயாவி ஒருவர்தான். ஏதும் ஆபத்து என்றாலும் கிராம மக்கள் மாயாவியிடம்தான் முறையிடுவார்கள். காட்டிலிருக்கும் கிராமங்கள் எல்லாம் ஒற்றுமை யுடன் இருக்கவேண்டும் என்று மாயாவி மிகவும் கண்டிப்புடன் இருப்பார். இனி கதைக்கு வாருங்கள்.

ஒருநாள்– டிராங்கி கிராமத்தினர் கொதித்து எழுந்தார்கள்.
காட்டை நாம்தான் ஆழவேண்டும்! இல்லை செத்து மடிய வேண்டும்!
தலைவன் கட்டளையிட்டான்.
வாம்பசி கிராமத்தில் அமைதியாக விவசாயம் பார்த்து வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தனர்.
இலங்கோ கிராமத்தினர் கால் நடைகளை வைத்து பண்ணைகள் அமைத்தார்கள்.
ஒகான் கிராமத்தினர் நார்களினால் வேலை பாடுகளுடன் கூடிய கலைப்பொருட்கள் செய்து பிழைப்பு நடத்தினர்.
ஆனால் டிராங்கி கிராமத்தினர் வேட்டையாடி பிழைப்பு நடத்தி வந்தார்கள். அவர்களுடைய கிராமம் மலைச்சரிவில் இருந்தது.
காட்டை ஆழ வேண்டும்! இது நம்முடைய காடு!
மோசஸ் தாத்தா! நம் காட்டில் பயங்கரமான வேட்டைக்காரர்கள் இருக்கிறார்களாமே!
ஆமாம் ரெக்ஸ்!

அவர்களுடைய அடாவடித்தனத்தில்தான் காட்டில் அமைதியே சீர்குலைந்து போகிறது!
அவர்கள் மிகவும் மோசமானவர்களா தாத்தா!
ஆமாம் ரெக்ஸ்! மற்ற கிராமத்துக் காரர்களை கண்டால் அவர்களுக்குப் பிடிக்காது!
மனிதனைக்கூட தின்னுவார்கள்!
மனிதனையா?
ஒருநாள் டிராங்கி கிராமத்தினர் இலங்கோ கிராமத்து ஆளை மடக்கினார்கள்.
இன்று நமக்கு நல்ல வேட்டை!
ஆமாம்!
உடனே அந்த வழியாக வந்த மாயாவி அவர்களை விரட்டினார்.
இருவரையும் பிடித்து தலையோடு தலையாக மோதினார்.

இவன் என்ன நம்மை தாக்குவது?
நேரம் வரட்டும் முகமூடியையும் ஒரு கை பார்ப்போம்!
டிராங்கி கிராமத்தினர் மலைச் சரிவுகளில் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தார்கள்.
அவர்கள் எல்லையைத்தான்டி காட்டுக்குள் வந்துவிடாமல் மாயாவி கண்காணித்துக் கொணடிருந்தார்.
ஒருநாள் டிராங்கியினர் காட்டுக்குள் நுழைந்தார்கள்.
ஏய்! இலங்கோவினரும், வாம்பசியினரும் பணத்தை சம்பாதித்து கொழுத்துப் போயிருக்கிறார்கள்!
அவர்கள் மீது தாக்குதல் நடத்தி பணத்தை சுருட்ட வேண்டும்!
ஆமாம்! அதுதான் நல்லது!

இதுபோல் அடிக்கடி டிராங்கியினருக்கும் மற்ற கிராமத்தினருக்கும் சண்டை நடந்துகொண்டே இருந்தது.
மாயாவி கிராமத்து தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தா.
அனைவரும் ஒற்றுமையுடன் இருப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்!
இதோ. இந்த எருதுதான் நம்முடைய சமாதானச் சின்னம்!
சமாதானத்தை விரும்புகிறவர்கள் இந்த எருது மீது அம்பை விடுங்கள்!
மாயாவி சொல்வது சரிதான்!
நாங்கள் தயார்!

இலங்கோ கிராமத்தினர் சமாதானத்தை விரும்புகிறோம்!
ஆமாம் நாங்களும் தயார்!
ஓகான் கிராமத்தினர் நாங்கள்!
நாங்கள் மோரி கிராமத்தினர்!
வாம்பசிக்கு தேவை சமாதானம்!
டிராங்கி கிராமத்தவரை காணவில்லை!
நாங்கள் சமாதானத்துக்கு சம்மதித்திருக்கிறோம். ஆனால் டிராங்கியினர்கள் வரவில்லையே!
நான் போய் அவர்களிடம் பேசிப்பார்க்கிறேன்!
மாயாவி! நீங்கள் தனியாக செல்லவேண்டாம் நானும்கூட வருகிறேன்!
ஓ.கே. நான் இப்போதே புறப்படுகிறேன்!
மாயாவியும்கூட ஒருவனும் டிராங்கி கிராமத்துக்கு வந்தனர்..
நாங்கள் உங்களை சமாதானத்துக்கு அழைக்க வந்திருக்கிறோம்!
சர்...சர்...!
பார்த்தீர்களா? இதுதான் அவர்களின் பதில்!
திடீரென்று சர் என்று அம்புகளும் ஈட்டிகளும் பாய்ந்து வந்தன.

எல்லா கிராமத்தினரும் ஒற்றுமையாக இருக்க சம்மதித்து விட்டனர்!
நீங்களும் அதற்கு சம்மதிக்க வேண்டும்!
நாங்கள் மலைவாழ் மக்கள். காட்டுவாசிகளுடன் ஏன் சேரவேண்டும்! போய் விடுங்கள்!
அவர்கள் காட்டுவாசிகள் இல்லையாம். மலைவாழ் மக்களாம். அதனால் சமாதானத்துக்கு மறுத்து விட்டனர்!
நான் இப்பொழுதே போய் அவர்கள் கிராமத்தை அழித்து வருகிறேன்!
அவசரப் படாதீர்கள்!
டிராங்கியினர் நம்மை தரக்குறைவாக பேசிவிட்டனர்! வாம்பசி கிராமத்தினர் அவர்களை கண்டிக்கிறோம்!
இலங்கோ கிராமத்தினரும் கண்டிக்கிறோம்!
அவர்களை இப்படியே விடக்கூடாது!

தலைவர்களே! இப்பொழுது தானே போர் கூடாது சமாதானம் வேண்டும் என்று அம்பு எய்தீர்கள்!
ஆமாம் அதற்காக?
அவர்கள் தாக்கினால் நாங்கள் சும்மா இருக்க முடியுமா?
கொஞ்சம் பொறுமையாக இருங்கள்! நானே முடிவு எடுக்கிறேன்!
வாம்பசி கிராமத்தினர் எப்பொழுதும்போல வயலில் இறங்கி வேலை செய்தார்கள்.
இலங்கோ கிராமத்தினர் மாடுகளை கவனித்தார்கள்.
மோரி கிராமத்தினர் மீன் பிடி தொழிலை செவ்வனே செய்து வநதார்கள்.
பறவைகள் இரைக்கு காத்திருப்பது போல, டிராங்கியினர் வேட்டைக்கு காத்திருந்தார்கள்.

மாயாவி தலையிட்டதில் சில ஆண்டுகள் காடு அமைதியாக இருந்தது.
காட்டுப் பெண்கள் இரவில் தனிமையில் நடமாட முடிந்தது.
ஒவ்வொரு கிராமத்தினரும் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்தி வந்தார்கள்.
ஆனால் டிராங்கியினர் தாக்குதல் நடத்த நேரம் பார்த் துக்கொண்டிருந்தார்கள்.
ஆ... நமக்கு வேலை வந்து விட்டது!
ஆமாம்!
காட்டில்...!
மாமா! எருது சிலையில் ஏன் அம்பு குத்தப்பட் டிருக்கிறது!
ரெக்ஸ்! கிராமத்தினர் ஒற்றுமையாக இருக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டதை நினைவூட்டவே இந்த ஏற்பாடு!
ரெக்சு! நான் வெளியே போய்விட்டு விரைவில் திரும்பி வருகிறேன். சமர்த்தாக இருக்க வேண்டும்!

இப்பொழுது காடு அமைதி யாகத்தான் இருக்கிறது. அதனால் தைரியமாக போய் வரலாம்!
ஆனால், டிராங்கி கிராமத்தவர்கள். வேறுவிதமாக திட்டம் வைத்திருந்தார்கள்.
வியாபாரிகள் பொருளை ஏற்றிக்கொண்டு காட்டுப்பாதை வழியாக வந்துகொண்டிருந்தார்கள்.
அப்போது–
ஆ...! தலை வெட்டிக் கூட்டம் வருகிறது!
டிராங்கியினர் கையில் பயங்கர ஆயுதங்களுடன் வியாபாரிகளை நெருங்கினார்கள்.
கையில் கிடைத்த வியாபாரிகளின் தலைகளை எல்லாம் சீவித்தள்ளி விட்டு பொருட்களை கொள்ளை யடித்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

ஆ... என்ன கொடுமை!
இது டிராங்கி கிராமத்தினருடைய வேலைதான் இது!
உடனே காட்டுவாசிகள், தலைவனிடம் முறையிட்டார்கள்.
வியாபாரிகளின் வண்டியை நாசமாக்கிவிட்டு அவர்களின் தலையை வெட்டிவிட்டனர்!
இது டிராங்கியினரின் வேலைதான்!
அவர்கள் நம் ஒன்றுமையை உடைக்க முயற்சிக்கிறார்கள். மாயாவியிக்கு இதைச் தெரிவிக்கனும்!
மாயாவி வெளிநாடு செல்ல விமானம் நிலையத்திற்கு வந்தார்.
உடனே இரண்டு பேர் மாயாவியை காண அடர்ந்த காட்டுக்குள் விரைந்தார்கள்.
டிராங்கியினர் வியாபாரிகளை தாக்கி விட்டனர்!
மாயாவியை எங்கே?
மாயாவி வெளியே போயிருக்கிறார்!
உடனே அவர்கள் தலைவரிடம் செய்தியை கூறினார்கள்.
மாயாவி காட்டில் இல்லை! வெளியே சென்று விட்டாராம்!
இப்போது என்ன செய்வது?

இது நமக்கு தேவையில்லாத விசயம்!
அவர்கள் நம்மைத் தாக்க வில்லையே? பிறகு ஏன் நாம் இதில் தலையிடவேண்டும்! வாம்பசி இராமத்தினரும் ஒதுங்கினார்கள்!
டிராங்கியினர் வியாபாரிகளை தாக்கிவிட்டு பணத்தையும் பொருட்களையும் கொள்ளையடித்துவிட்டுச் சென்றனர்.
இது நம் ஒகான் இராமத்துக்கு சேரவேண்டிய பொருள் இல்லை!
இலங்கோ இராமத்தினருக்கு சம்பந்தமே இல்லை!
மோரி இராமத்தினருக்கும் இதற்கும் தொடர்பே இல்லை!
எல்லா இராமத்தினரும் தொடர்பே இல்லை என்று கழன்று கொண்டனர். டிராங்கி இராமத்தினர்—
இப்படியே தொடர்ந்து கொள்ளை நடத்தினால் நமக்கு பணம் குவியும்!

எல்லா கிராமத்தினரும் சமா தானத்துக்கு கட்டுப்பட்ட தால் ஆயுதங்களுக்கு வேலை யில்லாமல் முடங்கிக்கிடந்தன.
காட்டுவாசிகள் அனைவரும் நன்றாக கொழுத்துப் போய்த்தான் இருக்கிறார்கள்!
நமக்கு இதுதான் நேரம்!
முதலில் ஒகான் கிராமத்தை தாக்குவோம்!
அதுதான் சிறிய கிராம்! அவர்கள் பலமும் குறைந்த வர்கள்!
டிராங்கியினர் முதலில் ஒகான் கிராமத்துகுள் புகுந்தார்கள்.
விடுகளுக்கு தீ வைத்தார்கள். கையில் கிடைத்தவர்களை எல்லாம் வெட்டி னார்கள்.
!
ஒகான் கிராமத்தவன் ஒருவன் உதவி கேட்டு வாம்பசி கிரா மத்தலைவனிடம் சென்றான்.
தலைவரே! டிராங்கியினர் எங்கள் கிராமத்துக்குள் புகுந்து வெட்டித் தள்ளுகிறார்கள்!
எங்களை சிறைப்படுத் துகிறார்கள்!

பாதிக்கப்பட்ட பெண்கள் மோரா கிராமத்துக்குள் அடைக்கலம் புகுந்தார்கள்.
இவர்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்!
வா மகளே வா!
காட்டில் ரகளை! டிராங்கியினர் ஓகான் கிராமத்துக்குள் புகுந்து தாக்குகிறார்கள்!
ரேடியோவில் செய்தி சொன்னார்கள்.
விமான நிலையத்தில்—
சார்! உங்கள் விமானம் இன்னும் 15 நிமிடத்தில் புறப்பட்டு விடும்!
ரொம்ப நன்றி!
இடையில் மாயாவி அன்றைய பத்திரிகையைப் படித்தார்.
காட்டில் ரகளை! டிராங்கியினர் ஓகான் கிராமத்துக்குள் புகுந்து வெறிச்செயல்!
உடனே மாயாவி தலை தெறிக்க ஓடினார்.
சார்! உங்கள் விமானம் இங்கே நிற்கிறது.
தயவு செய்து என் விமான டிக்கெட்டை நிறுத்தி விடுங்கள்!
கிராமத்தினர் வாக்கு கொடுத்த சமாதானம் என்னாச்சு?

இவர் எப்போது பார்த்தாலும் இந்த நாயுடன்தான் இருப்பார்! போலிருக்கிறது!
ஆமாம் சார்!
மாயாவி ஒரு வேனில் ஏறி காட்டுக்கு வந்தார்.
மிஸ்டர்! காட்டுக்குள் போகப் போகிறீர்கள்!
ஆமாம்! வரட்டுமா? நன்றி!
மாமா! உங்கள் ஹீரோ தயாராக இருக்கிறது!
நன்றி டோமா!
காட்டில் ரகளை! டிராங்கியினர் ஒகான் கிராமத்துக்குள் புகுந்து வெறிச்செயல்!
ஒகான் கிராமத்தை தாக்குகிறார்களா?
மாயாவி ஒகான் கிராமத்துக்கு வந்தார்.
கிராமமே வெறிச்சோடிக் கிடக்கிறது!
மாயாவி! கையில் கிடைத்தவர்களை எல்லாம் வெட்டி சாய்த்துவிட்டார்கள். சிலரை கைது செய்து விட்டார்கள்!

டிராங்கி கிராமத்தில்-
நமக்கு இப்போது நிறைய பணம் கிடைத்து விட்டது!
தம்பி உங்கள் தந்தையின் வாககை காப்பாற்றி விட்டீர்கள்!
ஆமாம்!
அடுத்து நமது குறி மோரி கிராமத்தின் மீது!
உடனே டிராங்கியினர் படையுடன் மோரி கிராமத்தை நோக்கி சென்றார்கள்.
ஆ... தலை வெட்டிக் கூட்டம்!
அவர்களை முரசு அடிப்பவன் பார்த்தான்.
உடனே முரசு அடித்து செய்தி பரப்பினான்.
டிராங்கியினர் கடற்கரையை நோக்கி செல்கிறார்கள்!
கடற்கரையை நோக்கி செல்கிறார்கள்!
அவர்கள் மோரி கிராமத்தை நோக்கித்தான் செல்கிறார்கள்!
மோரி கிராமத்தினர் சாதாரனமாக இருந்தார்கள். மாயாவி மோரி கிராமத்தை நோக்கி விரைந்தார்.

தலைவெட்டிக் கூட்டம் மோரி கிராமத்தை நோக்கி வேகமாக விரைந்து கொண் டிருந்தார்கள்.
ஆனால் மோரி கிராம மக் கள் ஆபத்தை அறியாமல் வேலை செய்துகொண்டி ருந்தார்கள்.
மாயாவி குதிரையில் விரைந்து கொண்டிருந்தார்.
மோரி கிராமத்தை காப்பாற்ற வாம்பசியிடம் உதவி கேட்கலாம்!
வழியில் வாம்பசி கிராமத்துக்கு வந்தார்.
தலைவரே! மோரிக்கு ஆபத்து!! நீங்கள் தான் உதவ வேண்டும்!
டிராங்கியினர் ஏற்கனவே ஒகான் கிராமத்தில் தன் கைவரிசை யை காட்டிவிட்டார்கள்.
அவர்கள் மனிதர்களே அல்ல இரத்தக் காட்டேறிகள்!
இப்போது மோரி கிராமத்தை நோக்கி படையெடுத்து வருகிறார்கள்.
அதற்கு நான் என்ன செய்யமுடியும்!

இதில் நாங்கள் தலையிட முடியாது!
அவர்களே உதவி கேட்டாலும் நாங்கள் உதவி செயய் முடியாத நிலையில் இருக்கிறோம்!
டிராங்கியினர் இப்பொழுது வந்துகொண்டிருக்கிறார்கள் என்கிறீர்களே! என்ன செய்வது!
இளைஞர்கள் வேட்டைக்குச் சென்றுவிட்டார்கள்!
இப்பொழுது வயதானவர்கள்தான் உழுதுகொண்டிருக்கிறார்கள்!
இப்போது கிராமத்தில் பெண்களும், குழந்தைகளும்தான் இருக்கிறார்கள்! என்ன செய்வது மாயாவி!

உடனே மாயாவி புறப்பட்டார்.
மோரியினத்தவருக்கு உதவ முடிய வில்லையே!
பாவாயில்லை தலைவரே!!
டிராங்கியினர் வேகவேகமாய் வந்துகொண்டிருந்தார்கள்.
மாயாவி மோரி கிராமத்திற்கு குறுக்குவழியில் வந்தார்.
அட மாயாவி வருகிறாரே!
டிராங்கியினர் உங்கள் கிராமத்தை நோக்கி படை எடுத்து வருகிறார்கள்!
தலைவெட்டிக் கூட்டமா?
இரவில் டிராங்கியினர் ஓர் இடத்தில் ஓய்வு எடுத்தார்கள்
மோரி கிராமத்தினர் பயந்தாங்கொல்லிகள் அவர்களை எளிதில் தாக்கலாம்!
ஒருவன் அரக்க பரக்க ஓடிவந்தான்.
தலைவெட்டிக் கூட்டம் வந்து விட்டது! கடலுக்குள் சென்றுவிடுவோமா?

நாங்கள் அனைவரும் குடும்பத்தோடு கடலுக்கு செல்கிறோம்!
உயிர் மீது அவ்வளவு பயமா?
இல்லை! நீங்கள் அவர்களை எதிர்த்து சண்டையிட வேண்டும்!
நீங்கள்தானே சண்டை போடக் கூடாது என்று ஆயுதங்களை, தூக்கி எறியச் சொன்னீர்கள்!
ஒரு இடத்தில் ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டு இருந்தன.
ஒற்றுமையை விரும்பி நாங்கள் ஆயுதங்களை ஓரங்கட்டிவிட்டோம்
எங்களிடம் வலையும் முள்கரண்டுயும்தான் இருக்கிறது!
இதை வைத்தே அவர்களை எதிர்க்கலாமே?
டிராங்கியினர் கூட்டத்தில்—
விடிந்ததும் தாக்குதலை தொடங்கலாம்!
ஆமாம்! அதுதான் நல்லது:

அதற்குள் மோரி கிராமத்தினர் தலைவெட்டிக் கூட்டத்தை எதிர்க்க ஆயுதங்களை தயார் செய்து வைத்தார்கள்.
நான் சொல்கிறபடி தாக்குதல் நடத்துங்கள்!
அப்படியே ஆகட்டும் மாயாவி!
பொழுது விடிந்ததும் டிராங்கியினர் தன் தாக்குதலை தொடங்கினார்கள்.
விடாதே!
கிராம எல்லையில் செடி கொடிகளை போட்டு வைத்திருந்தார்கள்.
அதோ தலை வெட்டிக் கூட்டம் வந்துவிட்டது!

உடனே செத்தையில் தீப்பந்தத்
தை எறிந்தார்கள்.
ஏய் அவர்கள் நம்மை தடுக்க தீயை கொழுத்துகிறார்கள். அந்தப் பக்கமாக செல்லுங்கள்!
மேலும் மோரியினர் கையில் வலை
யுடன் மரத்தில் காத்திருந்தார்கள்.
டிராங்கியினர் கிராமத்துக்குள் நுழைந்
தார்கள்.
அவர்கள் உள்ளே வந்ததும் வலையை
அவர்கள் மீது வீசினார்கள்.
தலைவெட்டிக் கூட்டம்
வலைக்குள் அகப்பட்டுக்
கொண்டது.
மாயாவி அங்கே வந்தார்.
இப்பொழுது என்ன செய்வது?
வாருங்கள் அவர்களை தாக்குவோம்!

மோரியினர் அவர்களை கடுமையாக தாக்கினார்கள்.
படார்...!
ஆ...!
மாயாவி அவர்களை மிரட்ட துப்பாக்கியால் சுட்டார்.
டுமீல்...!
டுமீல்...!
ம்...! சீக்கிரம் நடக்கட்டும்!
வலைக்குள் அகப்பட்டுக் கொண்ட டிராங்கினர் கத்தியை எடுத்து வலையை அறுத்தார்கள்.
டிராங்கியினர் மிரண்டு ஒட்டம்பிடித்தார்கள.
மோரியினர் அவர்களை விரட்டியடித் தார்கள்.
இனிமேல் இந்த பக்கம் தலைவைத்து படுத்தீர்கள் கொன்று விடுவோம்!
திடீரென்று ஏற்பட்ட கலவரத்தைப் பார்த்து டிராங்கியினர் பதட்டத்துடன் ஓடினார்கள்.
!!

ஆகா தலைவெட்டிக் கூட்டத்தை விரட்டி விட்டோம்!
வெற்றி! வெற்றி!
அசத்திவிட் டீர்களே!
மாயாவி அவர்களை பாராட்டினார்.
விடாதீர்கள்! அடித்து விரட்டுங்கள்!
டிராங்கியினர் தோற்றுப்போய் திரும்பினார்கள்.
நம் ஆட்கள் இருபது பேரை அவர்கள் கொன்றுவிட் டார்கள்!
காட்டுவாசிகள் நம்மைப் பார்த்து ஏளனமாக சிரிக்கிறார்கள்!
மாயாவிதான் அவர்களுக்கு உதவி செய்திருக்கிறான்!
அவனை விடக்கூடாது! பழிவாங்க வேண்டும்!

ஆகா! அந்த இரத்த காட்டேறிகளை அடித்து விரட்டிவிட்டோம்!
உலகமே உங்கள் வீரத்தைப் புகழப் போகிறது!
டிராங்கியினர் தங்கள் இருப்பிடம் திரும்பினார்கள்.
மாயாவி மட்டும் இல்லாவிட்டால் அவர்களை அழித்திருப் போம்!
இனி மாயாவி தான் நம் முதல் எதிரி!
நாம் அவனை பழிக்குபழி வாங்க வேண்டும்!
ஆமாம்!
நாம் மாயாவிக்கு சரியான பாடம் கற்பிக்கவேண்டும்!
நாம் அடர்ந்த காட்டுக்குள் நுழைய முடியாது. அங்கு குள்ளர்கள் விஷ அம்புகளுடன் இருப்பார்கள்!

பிறகு எப்படி அவனை தண்டிப்பது!
வேறு வழியில்தான் அவனை மடக்க வேண்டும்!
டிராங்கியினர் மாயாவியை பழிவாங்க நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
காட்டுக்குள்ளே-
டோமா! வருகிறாயா ஆசைதீர நீந்திக் குளித்துவிட்டு வரலாம்!
ரெக்ஸ் கேட்டான்.
உடனே இருவரும் ஜிம்போவின் மீது ஏறி புறப்பட்டார்கள். கூட ராணியையும் அழைத்துக்கொண்டார்கள்.
போய்விட்டு ஒரு மணி நேரத்தில் வந்துவிட வேண்டும்!
கண்டிப்பாக வந்துவிடுவோம்!
இருவரும் ஆற்றில் குதித்து கும்மாளமடித்தார்கள்.
அப்போது செடிகளின் மறைவில் இருந்து ஒரு ஜோடி கண்கள் அவர்களை நோட்டமிட்டது. அது வேறு யாருமல்ல டிராங்கி கூட்டத்தைச் சேர்ந்தவன்தான்.

உடனே டிராங்கியினர் கூடிப் பேசினார்கள்.
மாயாவ் ஒரு சிறுவனை வளர்த்து வருகிறார்!
அவன் இப்போது ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கிறான்!
அவனுடன் ஒரு யானையும் பெண் சிங்கமும் இருக்கிறது!
அவன் நமக்கு வேண்டும்!
ரெக்சும் டோமாவும் குளித்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்தார்கள்.
டிராங்கியினர் அவர்களை நோட்டமிட்டனர்.
டோமா! நான் தண்ணீருக்குள் எவ்வளவு நேரம் இருந்தேன் பார்த்தாயா!
நானும்தான் இருந்தேன்!
அப்போது டிராங்கியினர் ராணியை திசை திருப்ப ஒரு மானை பிடித்துவிட்டாகள்.

மானைக் கண்டதும் ராணி அதனை பின் தொடர்ந்தது.
ராணி! எங்கே போகிறாய்! வா இங்கே!
அதற்குள் மரத்தில் இருந்த இருவரில் ஒருவன் ரெக்சை பிடித்தான். இன்னொருவன் டோமாவை தாக்கினான்.
ஏய்...!
ஆ...!
ரெக்சு கூச்சலிட்டுப் பார்த்தான். ஆனால் அவனால் தப்பிக்க முடியவில்லை!
டோமா யானையில் இருந்து கீழே விழுந்தான்.
டோமா கீழே விழுந்ததில் மயங்கிச் சரிந்தான்.
ஏய்...! கத்தாதே! கத்தினால் குத்திவிடுவேன்!
?!

மானை விரட்டிச் சென்ற ராணி திடீரென்று நின்றது.


ராணி திரும்பி அங்கே வந்தது.

ரெக்சை காணாமல் ராணி திருதிருவென்று விழித்தது

Tex Sampath Tirupur

ரெக்க இமிறிப் பார்த்தான் தப்பிக்க முடியாமல் அடங்கிப்போனான்.
மாயாவி குகைக்குத் திரும்பினார்.
ரெக்சை எங்கே?
ரெக்சும், டோமாவும் குளிக்க ஆற்றுக்கு போனார்கள். இன்னும் வர வில்லை.
அப்போது– ஜிம்போ டோமாவை தூக்கிக்கொண்டு அங்கே வந்தது.
டோமா? என்னாச்சு!
ஆ... அம்மா....!
யாரோ என்னை ஜிம்போவில் இருந்து கீழே தள்ளிவிட்டு விட்டார்கள்?
ரெக்சை எங்கே?
எனக்குத் தெரிய வில்லையே?

உடனே மாயாவி ஆற்றுக்குச் சென்று பார்த்தார்.
இதோ இந்த இடத்தில் வைத்துதான் டோமா கீழே விழுந்திருக்கிறான்! மரக்கிளையில் இருந்து ரெக்சை தூக்கியிருக்கிறார்கள்!
அப்படியிருந்தால் ராணி பார்த்துக் கொண்டு சும்மா இருக்காதே!
அதுவும் சரிதான்!
ஒருவேளை மலைவாசிகள் ரெக்சை கடத்தியிருக்கலாமோ!
டிராங்கி கிராமத்தினர்தானே!
இந்தக் கிளையில் இருந்துதான் ரெக்சை தூக்கிச் சென்றிருக்கிறார்கள்.!
இங்கேதான் இறகு கிடந்தது!
இந்த இறகைப் பார்த்தால் மலைவாசிகள் என்பதில் சந்தேகமில்லை!
ஆமாம்! டிராங்கியினர்தான் ரெக்சை கடத்தியிருக்கக்கூடும்.

டிராங்கியினர்
ரெக்சை தூக்கிக்கொண்டு தங்கள் கிராமத்துக்குச் சென்றார்கள்.
கிராமத்தை அடைந்ததும் ஒருவன் கத்தியை எடுத்து, ரெக்சை நெருங்கினான்.
அவன் ரெக்சின் தலை முடியை கொத்தாக பற்றினான்.
இந்தத்தடவை இவன் தலைமுடியை அனுப்புவோம்!
அடுத்தமுறை இவன் தலையை வெட்டி அனுப்ப வேண்டும்!
ஒருவன் ரெக்சின் தலைமுடியை வெட்டினான்.
ஏய், பொடியனே! உனக்கு எழுத தெரியுமா? நான் சொல்வதை எழுது!
சூரன்! சந்தேகமில்லை டிராங்கியினர்தான் என்மேல் உள்ள கோபத்தில் ரெக்சை கடத்தியிருக்கிறார்கள்!
என்ன செய்வது?

நான் டிராங்கி கிராமத்துக்குப் போய் பார்த்துவிட்டு வருகிறேன்!
தனியாக போகாதீர்கள்!! நாங்களும் வருகிறோம்!
டிராங்கியினர் இருவர் காட்டுக்குள் வந்தார்கள்.
இந்த அம்பை விட்டால் போதும் மாயாவிக்கு செய்தி எட்டி விடும்!
காட்டுவாசிப் பையன்கள் அவுர்கள் விட்ட அம்பை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.
இந்த அம்பு டிராங்கியினரிட மிருந்து வந்திருக் கிறது!
அப்போது அங்கே மாயாவி வந்தார்.
மாயாவி! டிராங்கியினர் இந்த அம்பு மூலம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.
ரெக்சைப் பற்றி தகவல் இருக்கும்!
ரெக்சை எங்கே?
டிராங்கியினர்தான் அவனை தூக்கிச் சென்று விட்டனர். இதோ இது அவனுடைய தலை முடிதான். அவனே கைப் பட கடிதம் எழுதியிருக் கிறான்!

இந்தமுறை முடி
அனுப்பியிருக்கிறோம்!
அடுத்த தடவை அவன்
தலையை வெட்டி
அனுப்புவோம்!
மாமா எனக்கு பயமாக
இருக்கிறது!
ரெக்ஸ்.
மாயாவி கடிதத்தை திரும்பவும் படித்தார்.
இந்தமுறை தலைமுடி
அனுப்பியிருக்கிறோம்!
அடுத்த தடவை அவன்
தலையை வெட்டி
அனுப்புவோம்!
மாமா எனக்கு
பயமாக
இருக்கிறது!
ரெக்ஸ்.
கடிதத்தை படித்துவிட்டு மாயாவி மிகவும் வேதனை அடைந்தார்.
மாயாவி! மோரி கிராமத்தினருக்கு உதவி செய்தீர்கள் அல்லவா. அதனால்தான் பழிக்குபழி வாங்குகிறார்கள்!
ஆமாம் குரன்!
உங்களை அங்கே வரவழைக்கத்தான் ரெக்சை கடத்தி யிருக்கிறார்கள்!
நான் இப்போதே அங்கே போகிறேன்!

நான் போய் இப்போதே
ரெக்சை மீட்டு வருகிறேன்!
மாயாவி அவசரப்
படாதீர்கள்!

அது ஒரு
தலைவெட்டிக்
கூட்டம்! மிகவும்
பயங்கரமான
வர்கள்!
என் குரன்!

அதனால் நாங்களும்
உங்களுடன
வருகிறோம்!
வேண்டாம் குரன்!
அதற்கெல்லாம் நான்
பயப்படுகிறவன் அல்ல!
நான் தனியே செல்வது
தான் நல்லது!

மாயாவி டிராங்கி கிராமத்தை நோக்கி குதிரையில் விரைந்தார்.
ரெக்சு! அவர்கள் உன்னை எப்படியெல்லாம் சித்ரவதை செய்கிறார்களோ தெரியவில்லையே?
டிராங்கி கிராமத்தில்-
இதோ இந்த நாய்க்கறியை தின்னு!
இந்த நர மாமிசத்தையெல்லாம் நீயே தின்னு!
பொடிப்பயலே! எதிர்த்தா பேசுகிறாய்? உன்னை...
பளார்...!
ரெக்சின் கன்னத்தில் அறை விழுந்தது.
உடனே பதிலுக்கு ரெக்சும் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.
ஆ...!
கும்...!
ரெக்சு அவனைத் தாக்கியதும் மற்றவர்கள் கேலி செய்தார்கள்.
ஆ!
ஆகா... ஹா... ஹா...!
கும்...!

அவனுக்கு ஆத்திரம் தலைக்கு ஏற, கத்தியை உருவி ரெக்சின் தலைமுடியை பிடித்தான்.
பொடிப்பயலே! உன் தலையை வாங்காமல் விட மாட்டேன்!
மாயாவி பயங்கர வேகத்துடன் குதிரையில் பறந்து வந்துகொண்டிருந்தார்.
ரெக்சு! உனக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாது!
ரெக்சு அவன் முரட்டுப் பிடியில் இருந்து தப்பிக்க மீண்டும் அவனைத் தாக்கினான்.
ஆ...!
டேய்! உன் தலையை வெட்டியே தீருவேன்!
படார்...!
வேண்டாம்! அவன் நமக்கு தேவை!
உடனே ரெக்சு அவனை தூக்கி வீசினான்.
படார்...!
ஆ...!
அவன் தலைகீழாக வந்து தரையில் பொத் என்று விழுந்தான்.
டமார்...!
ஆ...!


அவன் கீழே விழுந்ததும் ரெக்க விடவில்லை மீண்டும் தாக்கினான்.

ரெக்க அவனுக்கு சரியாக பாடம் கற்பித்தான.
ஆ...அய்யோ!
பளார்....!

மாயாவி டிராங்கி கிராமத்துக்கு வந்தார்.
ரெக்சை இங்குதான் அடைத்து வைததிருப் பார்கள்!

ஏய்! மாயாவியை பிடிக்கும் வரை இவன் உயிரோடு இருக்கட்டும். அதன்பிறகு இவனை கொன்று விடலாம்!
இல்லை விட மாட்டேன்!
!
இப்போதே... அதுவும் என் கையால் அவன் சாகவேண்டும்!
அடிபட்டவன் ஆவேசமாக கத்தியை ஓங்கியபடியே ரெக்சை நெருங்கினான்.
அதற்குள் மாயாவியின் துப்பாக்கிக் குண்டு உடலை துளைத்தது.
அ...!
டுமீல்...!

??
அய்யா...! மாமா வந்துவிட்டார்...!
குண்டடிபட்டவன் சுருண்டு விழுந்தான்.
மாயாவி பாறைகளுக்குபின் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தார்.
ஆ... மாயாவி!
ஏய்... மாயாவி! மரியாதையாக சரணடைந்துவிடு! இல்லை இவனை குத்திக் கொன்றுவிடுவோம்!
மாமா...!

ஏய் முகமூடி! பேசாமல் துப்பாக்கியை கீழே போட்டு விட்டு சரணடைந்துவிடு!
வேண்டாம் மாமா!
வேண்டாம் மாமா...!
அவர்கள் வழியே செல்வோம்!
மாயாவி இரு துப்பாக்கி களையும் தூக்கி கீழே போட்டார்.
இல்லை ரெக்கு! நீ எனக்கு உயிரோடு வேண்டும். அதனால்தான் துப்பாக்கியை கீழே போட்டேன்.

உடனே அவர்கள் மாயாவியையும், ரெக்ஸையும் ஒரு மரத்தில் கட்டி வைத்தார்கள். பிறகு அவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் கோஷம் போட்டுக்கொண்டு மரத்தை சுற்றி வந்தார்கள்.
தெரியவில்லை ரெக்ஸ்!
மாமா! இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?
அடிமைகளாக இருந்த மற்ற கிராமத்துக்காரர்களுக்கு மாயாவி வந்து மாட்டிக்கொண்டது தெரிந்தது
மாயாவியா!
அவரால்தான் நமக்கு விடுதலை கிடைக்கும்!
ஆமாம்!
மாமா! அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்!
என் தலையை வெட்டப் போகிறார்களாம்!

Tex Sampath Tirupu

மாயாவி! எங்களை காப்பாற்று!
அவனே ஆபத்தில் சிக்கியிருக்கிறான்!
அவரால்தான் எங்களை காப்பாற்ற முடியும்!
அவன் கதை இப்பொழுதோ பிறகோ என்றிருக்கிறது!
ஏய்! மாயாவியை கொல்!
நிறுத்து! இவனுக்கு சாவே இல்லையாம்!
?
அது எப்படி என்று பார்த்துவிடலாம்! இவன் எல்லாரையும் ஏமாற்ற இப்படி சொல்லிக் கொண்டு திரிகிறான்!
டிராங்கியினர் ஒரு முடிவுக்கு வராமல் திணறிக்கொண்டிருந்தார்கள்.
இப்பொழுது என்ன செய்வது?

இவனுக்கு சாவே கிடையாது!
இவன் செத்து விட்டால் இவன மாயரவியே இல்லை!
ஏய்: இதற்கு நீ என்ன சொல்கிறாய்?
இதற்கு என்னைத் தவி வேறு யாருக்கு விடை தெரியாது!

இவனை பேசாமல் தலைவரிடம் ஒப்படைத்து விடலாம்!

உடனே மாயாவியையும் ரெக்சையும் உள்ளே அழைத்துச் சென்றார்கள்
மாமா! எங்கே அழைத்துச் செல்கிறார்கள்?
தெரியவில்லை ரெக்ஸ்!

ஏய்! தலைவர் முன்னால் மண்டியிட்டு அமரவேண்டும். புரிகிறதா?
மாமா! இவனுகளுக்கு தலைவன் வேறு இருக்கிறானா?
உஷ்... கத்தாதே!
டிராங்கி கூட்டத்தினருக்கு ஒரு தலைவன் இருந்தான். இருவரையும் அவன் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.
வா மாயாவி! நீ சாகாவரம் பெற்றவனாமே?
மாயாவி! உன்னைப் பற்றி என் தந்தையார் நிறையவே சொல்லி யிருக்கிறார்! நீ கடவுள் அவதாரம் எடுத்த வனா? அதையும் பார்த்து விடு வோம்!
என்ன மாமா! கடவுள் அது இது என்று பிதற்றுகிறான்!
சும்மா ஏதோ உளறுகிறான்!

ஏய் மாயாவி! நீ எதற்காக எங்கள் கோட்டைக்கு வந்தாய்?
இந்த சிறுவனை காப்பாற்ற வந்தேன். அப்படியே உங்கள் அட்டூழியத்தை அடக்க வந்தேன்!
இல்லை! உன் காட்டு மக்களுடன் எங்களால் சமாதானமாக போக முடியாது!
அதுதவிர நாங்கள் இந்த சிறுவன் தலையை வெட்ட முடிவு எடுத்துவிட்டோம்!

தலைவரே! நமக்கு இவன் தலையும் வேண்டும்.
அவன் தலை நமக்கு வேண்டாம். இவன் சாகவே மாட்டான்...!

பேசாமல் பூமியை தோண்டி இவனை புதைத்துவிடலாம்!

இது அநியாயம் மாமா!
ரெக்சு! பதட்டப் படாதே!

இவனை புதைத்துவிட்டால் இவனால் வெளியே வரமுடியாது!
மாயாவிக்கு இதுதான் சரியான தண்டனை!
ஆமாம்!
மாமா! இவர்கள் தண்டனை முட்டாள்தனமாக இருக்கிறதே!
ரெக்ஸ்! இதனால்தான் மக்கள் இவர்களை காட்டுமிராண்டிகள் என்று சொல்லுகிறார்கள்!
முதலில் இவர்களிடம் இருந்து தப்ப வேண்டும்!
எப்படி மாமா முடியும்!
அங்கே மாயாவிக்கு குழி வெட்டப்பட்டது.
எல்லாம் முடிந்து விட்டதா?

ரெக்ஸ்! என் பூட்சில் இருக்கும் கத்தியை எடுத்து கயிற்றை வெட்டு!
ஆ...!
உடனே ரெக்ஸ் பூட்சில் இருந்து கத்தியை உருவி கட்டியிருந்த கயிற்றை வெட்டினான்.
மாமா! எடுத்து விட்டேன்!
சீக்கிரம் வெட்டு! அவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்!
ஏய்...! அந்த முகமூடியை குழிக்குள் போட்டு புதையுங்கள்!
தலைவன் கட்டளையிட்டான்.
ரெக்ஸ்! அவர்கள் வருகிறார்கள்! என் பின்னால் பதுங்கிக்கொள்!

ஆ...!
கும்...!
அவர்கள் அருகில் வந்ததும் மாயாவி அவர்கள் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டார்.
மாயாவி அவர்களை நையபுடைத்தார்.
ஏய்...! நிறுத்து! அவனை அடிக்காதே!
தலைவன் கத்தினான்.
ஏய்...! உன்னை யார் அவிழ்த்து விட்டது!
கும்...!
கும்...!
வா! அவனை இழுத்து வருவோம்!

Tex Sampath Tirupur

ஆயுதங்களை போடாவிட்டால் உங்கள் தலைவனின் தலையை வெட்டிவிடுவேன்.
அதற்குள் உன்னைக் கொன்றுவிடுவோம்!
முட்டாள்தனமாக பேசாதே! உன் தலைவனின் உயிர் வேண்டுமா? வேண்டாமா?
ஏய்...! அவன் சொல்கிறபடி கேளுங்கள்!
உம்... ஆயுதங்களை கீழே போடுங்கள்!
டேய்! போட்டுத் தொலையுங்கள்!
தலைவன் சொன்னதும் அனைவரும் ஆயுதங்களை கீழே போட்டனர்.
உங்களிடம் இருக்கும் அத்தனை பேரையும் விடுதலை செய்யுங்கள்!
மாயாவி கட்டளையிட்டார்.
உடனே கைதிகளாக இருந்த காட்டுவாசிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.
ஆகா! விடுதலை
அய்யா...!

நீ சொன்னபடியெல்லாம் நாங்கள் நடந்துகொண்டோம். எங்கள் தலைவரை கொன்றுவிடாதே!
பயபபடாதீர்கள்! நரன் யாரையும் கொல்ல மாட்டேன் எனக்கு தேவை சமாதானம்தான்!
உன் பேச்சை மறுத்தால்...!
தலைவர் சித்ரவதை செய்யப்படுவார்! எப்படி வசதி?
உடனே மாயாவி டிராங்கியினர் அனைவரையும் கைது செய்து அழைத்து வந்தார்..

காட்டுவாசிகள் இரண்டு பேர் மறைந்திருந்து அந்தக் காட்சியை பார்த்தார்கள்.
டேய்! தலை வெட்டிக் கூட்டத்தை மாயாவி பிடித்துவிட்டார்!
உடனே முரசு அடிப்பவன் செய்தியை பறைசாற்றினான்.
டிராங்கியினரை மாயாவி மடக்கி அழைத்து வருகிறார்!
மாயாவி அனைத்து கிராமத்து தலைவர்களை வரவழைத்து பேச்சு நடத்தினார்.
நம்மால் இவனுடன் எப்படி ஒத்துப் போக முடியும்!
மோரி கிராமத்தினரையும், ஒகான் கிராமத்தினரையும் இவன் என்னபாடு படுத்தியிருக்கிறான்!
நாம் அவனுகளுக்கு பயந்தகாலம் எல்லாம் போய்விட்டது!
இப்பொழுது அவர்கள் நமக்கு பயப்படும்படியாக மாயாவி செய்துவிட்டார்!

மாயாவி டிராங்கியினரையும் சமாதானத்துக்கு சம்மதிக்க வைத்து அவர்களையும் இந்த எருதுச் சின்னத்தில் அம்பு எய்து உறுதிமொழி வாங்கிக் கொண்டார். அதன்பின்னர் காட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள்.
மாமா! எப்படியோ டிராங்கியினரையும் சம்மதிக்க வைத்துவிட்டீர்கள்!
ரெக்ஸ்! அவ்வளவு எளிதில் அவர்களை விட்டு விடுவேனா?
ரெக்ஸ்! நீ எப்படிடா அந்த தலைவெட்டிக் கூட்டத்தில் இருந்து தப்பி வந்தாய்?
மாயாவி மாமாதான் என்னை காப்பாற்றினார்!
அப்பாடி! ஒருவழியாக காட்டில் மீண்டும் ஒற்றுமையை கொண்டுவந்துவிட்டேன்!
முடிந்தது

அடுத்த
காமிக்ஸ்

தோன்றும்

மரணக் குகை

மரணக் குகைக்குள் சென்றவர்கள் உயிரோடு திரும்பியது இல்லை! ஆனால் பிளாஷ்கார்டன் உயிர் தப்பினாரா?

விறுவிறுப்பான விண்வெளிப் படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

ஜூன் 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக

32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

புதிய நிறம்!
புதிய புதிய சுவை!
புதிய
POPPINS
ரூ 1.25